அக்டோபர் 2016

ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி

வேணு 22; கானம் 3



தனி பிரதி
*Rs 15/-*
ஆண்டு சந்தா
*Rs 180/-*


**மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை**

NO FAME
NO SELF INTEREST
ONLY GOD
NO NAME

**Delivered by India Post**
**www.indiapost.gov.in**



**சைதன்ய குடீரத்தின் பிரதிஷ்டா தினம், கோவிந்தபுரம், 16 Sep 2016**




<u>**முன் அட்டை:**</u>

**மதுரபுரி ஆஸ்ரமம்**

<u>**பின் அட்டை:**</u>

**மதுரபுரி ஆஸ்ரமத்தில்**
**ப்ரஹ்மோத்ஸவத்தில்**
**குதிரை வாஹனம்**

மதுரமுரளி
வேணு 22; கானம் 3

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

# பொருளடக்கம்

மதுரமான மஹனீயர்-247 5
8 பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள்
A Letter to the Formidable Maya 9
11 அன்பின் உயர்ந்த வெளிப்பாடு
ராதாஷ்டமி 12
14 ஸ்ரீ ராதிகா பஞ்சகம்
ராதாதேவியின் தியானம் 15
18 கச்சியில் ஆனி கருட சேவை
ராமநாத ப்ரம்மச்சாரி 20
30 பாலகர்களுக்கு ஒரு கதை
அமோகம் 32
34 Bore-ஐ விரட்டுவோம்
சைதன்ய மஹாப்ரபு 37
39 புராநவா
சனாதன புதிர் 40
41 படித்ததில் பிடித்தது

# மதுரகீதம்

## ராகம்: ஜோன்புரி; தாளம்: ஆதி

யமுனை கரையில் ராதே ராதே! தனிமையில் அமர்ந்திருக்கும் ராதே ராதே!
முகத்தில் வாட்டமோ ராதே ராதே! என்னிடம் சொல்லிடுவாய் ராதே ராதே!
மனதில் உள்ளதை தோழீ தோழீ! வெளியில் சொல்லிடவே தோழீ தோழீ!
வெட்கம் தடுக்குதடி தோழீ தோழீ! வேதனை வேதனை தோழீ தோழீ!

என்னிடம் சொல்வதற்கு ராதே ராதே! ஏனிந்த வெட்கம் ராதே ராதே!
மனதில் உள்ளதை ராதே ராதே! என்னிடம் சொல்லிடுவாய் ராதே ராதே!
அன்றொரு நாள் யமுனை கரையில் தோழீ தோழீ! ஓர் அழகனை கண்டேன் தோழீ தோழீ!
மயிலிறகு அணிந்திருந்தான் தோழீ தோழீ! கோடி மன்மதனை ஒத்திருந்தான் தோழீ தோழீ!

மேலும் சொல்லிடுவாய் ராதே ராதே! கேட்க ஆவலுடன் உள்ளேன் ராதே ராதே!
அவன் ஊர் ஏதோ ராதே ராதே! பெயரை நீ கேட்டனையோ ராதே ராதே!
அதிருக்கட்டும் ஒரு புறம் தோழீ தோழீ! கண்டதுமே காதல் கொண்டேன் தோழீ தோழீ!
அவனை நினைத்து நினைத்து தோழீ தோழீ! அல்லும் பகலும் தவிக்கின்றேன் தோழீ தோழீ!

அதிலென்ன தவறு ராதே ராதே! அவன் அழகின் மயக்கம் ராதே ராதே!
இயல்பு இது தானே ராதே ராதே! கவலையை விட்டிடுவாய் ராதே ராதே!
மற்றொரு நாள் வீற்றிருந்தேன் தோழீ தோழீ! இனிமையான குழலோசை தோழீ தோழீ!
காற்றில் மிதந்து வந்தது தோழீ தோழீ! இசைத்தவரை காதல் கொண்டேன் தோழீ தோழீ!

நல்ல இசைதன்னில் ராதே ராதே! மயங்காதவர் உண்டோ ராதே ராதே!
ஏதும் தவறில்லை ராதே ராதே! கலக்கம் தவிர்த்திடுவாய் ராதே ராதே!
முரளீதரன் நாமம் கேட்டேன் தோழீ தோழீ! நாமத்தினில் காதல் கொண்டேன் தோழீ தோழீ!
மேலும் அது வளர்ந்தது தோழீ தோழீ! அதன் நாமியை காதல் கொண்டேன் தோழீ தோழீ!

அழகான நாமம் தானே ராதே ராதே! ஆசை வைத்திட்டாய் ராதே ராதே!
இதிலென்ன தவறு ராதே ராதே! ஏதும் சொல்வதற்கில்லை ராதே ராதே!
குலப்பெண் நானடி தோழீ தோழீ! தர்மத்திற்கு அடுக்குமோ தோழீ தோழீ!
மூவரிடம் என் மனது தோழீ தோழீ! காதல் கொள்ளலாகுமோ தோழீ தோழீ!

அன்று வந்த ஒருவனும் ராதே ராதே! குழலூதிய ஒருவனும் ராதே ராதே!
முரளீதரன் நாமம் உடையவனும் ராதே ராதே! மூவரும் ஒருவரே ராதே ராதே!
ஐயம் தவிர்த்திட்டாய் தோழீ தோழீ! ஆறுதல் அளித்திட்டாய் தோழீ தோழீ!
உனக்கென்ன கைமாறு தோழீ தோழீ! செய்தாலும் தகுமே தோழீ தோழீ!



# மதுரமான மஹநீயர்

ஸ்ரீஸ்வாமிஜி அடிக்கடி சொல்வதுண்டு, “மஹாமந்திரத்தை நமக்கு காட்டி கொடுத்த கலிசந்தரண உபநிடதத்தில், மூன்றரை கோடி முறை இந்த மஹாமந்திரத்தை சொன்னால், சித்தி பெறலாம் என்று ப்ரும்ம தேவரே உபதேசித்து இருக்கிறார்.”

டாக்டர் ஆ பாக்யநாதன்

கும்பகோணத்தில் கைலாசம் அய்யர் என்ற பிரபலமான சங்கீத வித்வான் இருந்தார். அவருடைய குமாரர் ராமச்சந்திரன். ராமச்சந்திரனும் நன்றாக பாடுவார். அவரை பாட்டு ராமச்சந்திரன் என்றால்தான், எல்லோருக்கும் நன்றாக தெரியும். ஒரு சிவராத்ரி அன்று முழுவதும், மஹா பெரியவாளை தரிசனம் செய்துவிட்டு திரும்பும்பொழுது, பாட்டு ராமச்சந்திரன் ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு பழக்கம் ஆனார். அதன்பிறகு அடிக்கடி ஸ்ரீ ஸ்வாமிஜியை பார்க்க வருவார். அவர் பாரதிதாசன் காலனியில் 51K ப்ளாட்டில் தங்கியிருந்தார்கள். முதல்முதலாக அந்த Flatற்கு, கோகுலாஷ்டமி கொண்டாட ஸ்ரீ ஸ்வாமிஜியை அழைத்து வந்தார். அன்று ஒரு தஞ்சாவூர் க்ருஷ்ணன் படத்தை வைத்து, கோகுலாஷ்டமி கொண்டாடப்பட்டது. அந்த Flatல் வசித்தவர்கள் எல்லோரும் கலந்துகொண்டார்கள். சில நாட்கள் கழித்து ஸ்ரீ ஸ்வாமிஜி, அந்த Flatல் வந்து வாடகைக்கு தங்க ஆரம்பித்தார். நானூறு ரூபாய் வாடகை. ராமச்சந்திரன் சில நாட்கள் தன் வீட்டிலிருந்து ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு உணவு கொண்டு வந்து கொடுப்பார். வாடகையை ஸ்ரீதர் கொடுத்துவிடுவார்.

பெரும்பாலும் ஸ்ரீஸ்வாமிஜி தியானத்திலும், ஜபத்திலும், நாமகீர்த்தனத்திலும் இருப்பார்கள். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜியிடம் ஒரு மஹாபெரியவாள் படமும், அவருடைய பாதுகைகளும் மட்டுமே இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் தெரிந்துகொண்டு வருவார்கள். சத்சங்கம் நடக்கும். அப்பொழுது, அருணாசல அக்ஷரமணமாலையும் ஆத்மநிவேதனமும் சொல்லிக்கொண்டே இருப்பார். கோமதி மாமி, உமா அக்கா, உஷா அக்கா, அவர்களின் அம்மா லக்ஷ்மி, ஹரி, கிரி, மீனாக்ஷி மாமி, L மாமி, பெங்களூர் லக்ஷ்மி அம்மா கல்யாணி மாமி, ஜயந்தி மாமி, அண்ணா நகர் ஸ்ரீதர், கிரிஜா, சந்திரா சித்தி, சேகர் சித்தப்பா, காஞ்சனா-சங்கரன் தம்பதியினர், ஐ.ஓ.சி. ஜெயா மாமி எல்லோரும் இங்குதான் முதல்முதலில் வர ஆரம்பித்தார்கள்.

இப்பொழுது ஆஸ்ரமத்தில் இருக்கும் திவ்யநாம கிருஷ்ணர் முதன் முதலாக, இங்குதான் வந்தார். இந்த க்ருஷ்ணர் ஸ்வாமிஜியுடன் அடிக்கடி விளையாடுவார். இன்று வரையில், இந்த க்ருஷ்ணர் மட்டும் பத்தாயிரத்திற்கும் மேல், திவ்யநாம பஜனைகளை கேட்டிருப்பார். நவராத்திரி சமயத்தில், இந்த க்ருஷ்ணருக்கே ஸ்ரீஸ்வாமிஜி பலவித அலங்காரங்களை செய்வார். ஸ்ரீஸ்வாமிஜி அந்த ப்ளாட்டில் ஆழ்ந்த தியானத்தில் இருக்கும்பொழுது, ஒரு திவ்யமான Fragrance வரும்.

ஸ்ரீஸ்வாமிஜியின் அடுத்த ப்ளாட்டில் சந்திரா சித்தி-சேகர் சித்தப்பா தம்பதியினர் வசித்து வந்தார். அவருடைய மாமியார் பட்டு பாட்டி. ஸ்ரீஸ்வாமிஜி தனிமையில் இருக்கும்பொழுது, இந்த பாட்டியை ஸ்மரித்து கண்ணீர் விடுவார். ஆதிசங்கரர் வீட்டை விட்டு கிளம்ப, தாய் ஆர்யாம்பாளிடம் அனுமதி கேட்கின்றார். தாயாரோ நாளை முதல் உனக்கு யார் அன்னமிடுவார் என்று கேட்கின்றார். அதற்கு சங்கரர், இன்று வரையில் நீ மட்டுமே எனக்கு அம்மா. நாளை முதல் எனக்கு அன்னம் இடுபவர்கள் எல்லாம் எனக்கு தாய் என்பார். ஸ்ரீஸ்வாமிஜியும் இதை அடிக்கடி கூறுவார்.

பட்டு பாட்டி, ஓயாமல் குடும்பத்திற்காக உழைப்பார். அவர் Diabetic Patient என்பதால், அதிகமாக எதுவும் சாப்பிட மாட்டார். வீட்டில் எல்லோரும் வெளியில் சென்ற பிறகு, தானே ரிக்ஷாவில் ஏறி, டாக்டரிடம் சென்று, Insulin போட்டுக்கொண்டு வருவார். கோபமே வராது. பொறுமையாக இருப்பார். ஸ்ரீஸ்வாமிஜி எப்பொழுதும், கதவை தாள் போட்டுக் கொண்டிருப்பார். பாட்டி, எப்பொழுது ஸ்வாமிஜி கதவை திறப்பார் என்று காத்துக்கொண்டே, எதிர் மாடி படிக்கட்டில் அமர்ந்திருப்பார். கதவை திறந்தவுடன், ஹார்லிக்ஸ், காபி, தோசை, சாதம் ஏதாவது வற்புறுத்தி கொடுத்து கொண்டே இருப்பார். அதிர்ந்து ஒரு வார்த்தை பேச மாட்டார். கடைசி நாட்களில், சில காலம் உடல்நலம் சரியில்லாமல் இருந்து வைகுண்டத்தை அடைந்தார்.

இந்த பட்டு பாட்டியின் பேரன்தான் தற்பொழுது பரம பாகவதராக விளங்கும், சுமந்த் என்கிற விஷ்ணுராதன். கோவிந்தபுரத்திலேயே குருநாதர் சன்னதியில் தங்கி, சைதன்யகுடீரத்தில் ஜகன்னாதரை பூஜை செய்து வருகின்றார். இவ்வருடம் ஸ்ரீ ஜகன்னாதர், ஸ்ரீ சுபத்ரா, ஸ்ரீ பலராமர், ஸ்ரீ க்ருஷ்ண சைதன்யர், ஸ்ரீ நித்யானந்தர் மூர்த்திகள் அருள்பாலிக்கும் கோவிந்தபுரம் சைதன்ய குடீரத்தின் பத்தாவது வருட ஆண்டு விழா செப்டம்பர் 19 அன்று, இனிதே நடைபெற்றது. இந்த விழாவிற்கு பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீ அண்ணா அவர்கள் வந்திருந்து, ஸ்ரீஸ்ரீ அண்ணாவே அருளிய 'பக்தி பாடம்' பிரவசனமும், ஐந்து நாட்கள் செய்து அருளினார்கள். நமது ஸ்ரீஸ்வாமிஜியும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

ஸ்ரீஸ்வாமிஜி அடிக்கடி சொல்வதுண்டு, "மஹாமந்திரத்தை நமக்கு காட்டி கொடுத்த கலிசந்தரண உபநிடதத்தில், மூன்றரை கோடி முறை இந்த மஹாமந்திரத்தை சொன்னால், சித்தி பெறலாம் என்று ப்ரும்ம தேவரே உபதேசித்து இருக்கிறார். இந்த சைதன்ய குடீரத்திலோ, ஒரு வருடமல்ல, இரண்டு வருடமல்ல, விடாமல் ஒன்பது வருடங்களுக்கு மேல் இடைவிடாது மஹாமந்திர கீர்த்தனம் நடந்து கொண்டிருக்கிறது. அதுவும் வருடத்தின் 365 நாட்களும் தினமும் மஹாமந்திரம் காலை 6முதல் மாலை 6வரை இடைவிடாது ஒலித்து கொண்டிருக்கிறது. அதுவும் இங்கு ஒருவர் சொல்லாமல், சமஷ்டியாக பலர் நாமம் சொல்லி கொண்டு இருக்கிறார்கள். விடுமுறை காலத்திலோ, உற்சவ காலங்களிலோ நூற்றுக்கணக்கான மக்கள் வந்து மஹாமந்திர கீர்த்தனத்தையே சொல்கிறார்கள். இது ஒரு மஹாமந்திர ஆலயம். இங்கு விளம்பரத்திற்காகவோ, பணத்திற்காகவோ, பெருமைக்காகவோ நாமகீர்த்தனம் நடப்பதில்லை. நாமத்திற்காகவே நாமத்தை அன்பர்கள் சொல்லி வருகிறார்கள். மேலும் எந்த ஒரு நாமத்தை தவிர கலியில் வேறு கதி இல்லை என்று மஹான்களும், உபநிடதமும், புராணங்களும் ஒருமித்த குரலில் கோஷிக்கின்றனரோ, அந்த நாமம் விடாது நடக்கும் ஒரு திவ்ய ஆலயம் இது. மேலும் எந்த ஒரு தர்மமும் ஒரு நதி தீரத்தில், கோவிலில், பசுக்கொட்டிலில் நடந்தால் மிகவும் விசேஷம் என்று சொல்லி இருக்கிறது. திராவிட தேசத்தில் ஓடும் சப்த புண்ய நதிகளில் ஒரே நதியான காவேரி தீரத்தில் இது நடந்து வருவதாலும், எல்லாவற்றுக்கும் மேலாக, எங்கு ஸ்ரீபோதேந்திராள் சித்த சரீரத்துடன் பூமிக்கடியில், 300வருடங்களாக தாரக மந்திரம் சொல்லி வருகிறாரோ, அப்படிப்பட்ட பரம பவித்ரமான பூமியில், இந்த நாமகீர்த்தனம் நடந்து வருவது இதன் விசேஷத்தை பன்மடங்கு கூட்டுகிறது. அப்படிப்பட்ட க்ஷேத்ரம். இது எல்லாம் சத்குருவின் கிருபையினால்தான் சாத்தியம் ஆகிறது" என்று ஸ்ரீஸ்வாமிஜி சொன்னார்கள்.

இந்த மஹாமந்திர ஆலயத்தினுள் ஒருமுறை ஒருவர் வந்து சென்றாலே, அவர்கள் மிகவும் புனிதமாகி விடுவர் என்றும் அருளினார்கள்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள்

யாருடன் சேர்ந்து இருக்க வேண்டும்?

தெய்வத்தை நம்புபவர்களுடன்.

தெய்வத்தை நம்புபவர்கள் என்றால் யார்?

ஆத்ம குணங்கள் உடையவர்கள்.

ஆத்ம குணங்கள் உடையவர்கள் யார்?

ஹரி பக்தி உடையவர்கள்.

ஹரி பக்தி உடையவர்கள் யார்?

க்ருஷ்ண பக்தி உடையவர்கள்.

க்ருஷ்ண பக்தி உடையவர்கள் யார்?

சாத்வீகமாக பக்தி செய்பவர்கள்.

சாத்வீகமாக பக்தி செய்பவர்கள் யார்?

கீர்த்தனம், சிரவணம் இரண்டிற்கும், அதன் இனிமைக்காகவே பிரதானம் கொடுப்பவர்கள்.

கீர்த்தனம் சிரவணம் செய்து கொண்டிருப்பவர்கள் யார்?

அவர்களை அறியாமலே க்ருஷ்ணனை அடைந்த பாகவத பரமஹம்ஸர்கள்.

# A LETTER TO THE FORMIDABLE MAYA

Poem by Sri Sri Muralidhara Swamiji

No matter the worries, stress and pain
One runs after money relentlessly in vain
NONE CAN ESCAPE YOUR CLUTCHES
BECAUSE IN WEALTH YOU DWELL, OH MAYA!

No matter the perils and insults one faces
Power is the one thing that everyone chases
NONE CAN ESCAPE YOUR CLUTCHES
BECAUSE IN POWER YOU DWELL, OH MAYA!

No matter the setbacks, brickbats and shame
One remains undeterred in the mad pursuit of fame
NONE CAN ESCAPE YOUR CLUTCHES
BECAUSE IN FAME YOU DWELL, OH MAYA!

No matter the noble lineage or upbringing

One does a despicable act without repenting

NONE CAN ESCAPE YOUR CLUTCHES

BECAUSE IN SUCH WEAK MOMENTS YOU DWELL, OH MAYA!

No matter the desires renounced and senses controlled for God realization

One stumbles drastically lured by the tiniest temptation

NONE CAN ESCAPE YOUR CLUTCHES

BECAUSE IN TEMPTATIONS YOU DWELL,

OH MAYA!

OH Formidable Maya!

Praise be to you! The victor of victors!

You will live in this world forever

As, satisfaction in these pursuits, will happen never.

The rarest stories of victories over you

Makes me wonder, if they are even true!

I beg a fitting reward for singing paeans on you,

Please desert me, now and forever, will you?

# அன்பின் உயர்ந்த வெளிப்பாடு



**செப்டம்பர் 9, ராதாஷ்டமி அன்று, ராதாக்ருஷ்ணரின் லீலைகளை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் உபன்யாசம் செய்ததில் இருந்து......**

**"ராதையும் க்ருஷ்ணரும், லீலைகள் அனைத்தையும், அவர்களின் அந்தரங்க சகிகளின் ஆனந்தத்திற்காகவே செய்கின்றனர். அது எப்படி பொருத்தமாகும்? ராதைக்குத்தானே ஆனந்தம்? சகிகளுக்கு எப்படி ஆனந்தம் ஆகும்? இதை எல்லோருக்கும் புரியும் வகையில் எளிமையாக சொல்கிறேன்.**

**நம் நாட்டிற்கும், வேறு ஒரு நாட்டிற்கும் இடையில் ஒரு முக்கியமான கிரிக்கெட் மேட்ச் என வைத்து கொள்வோம். 50000 ரசிகர்கள். பரபரப்பான கட்டம்! கடைசி பந்தில், சிக்ஸர் அடித்தால் வெற்றி என்ற நிலை. ஆடுபவர் ஆறு ரன்களை அடிக்க கூடிய திறமை பெற்றவர். பயிற்சியும் அனுபவமும் வாய்ந்தவர். அடித்து ஜெயித்தும் விடுகிறார். அப்பொழுது, ஆடியவர் மட்டுமா மகிழ்கிறார்? அவரை விடவும், ஆனந்தமாக, பார்க்கும் ரசிகர்கள் குதித்து, கரவொலி எழுப்பி, ஆரவாரத்துடன் மகிழ்ச்சியை தெரிவிக்கின்றனர் அல்லவா! ரசிகர்களுக்கு அவரை போல ஆட திறமை இல்லை எனினும், மிகவும் மகிழ்கிறார்கள்.**

**அதுபோல, க்ருஷ்ணருடன் லீலை செய்ய ராதாதேவியால் மட்டுமே முடியும். மேட்ச்சில் ஆட்டக்காரரிடம் இஷ்டமுள்ளோர் பலர், அவராடுவதை பார்த்து சந்தோஷப்படுவது போல், ராதாகிருஷ்ண யுகளமூர்த்திகள் லீலை செய்கையில், ராதையிடம் பிரியமுள்ள சகிகளிடம் அதை விடவும் ஆனந்தம் ஏற்படுகின்றது. சுயநலமே இல்லாத யுகளமூர்த்திகள், இப்படி, ராதையின் சகிகளின் ஆனந்தத்திற்காகவே லீலை செய்கின்றனர்."**

# ராதாஷ்டமி

ஆவணி சுக்லபக்ஷ அஷ்டமியில் அவதரித்த பர்ஷானா ராணி ராதாதேவியின் அவதாரத்தை கொண்டாட, மதுரபுரி ஆஸ்ரமம் களை கட்டி இருந்தது. ஒன்பதாம் மாதமான செப்டம்பரில் ஒன்பதாம் தேதி, அனுராதா நக்ஷத்திரத்தன்று இம்முறை அத்திருநாள் வந்தது (2016இன் கூட்டுத்தொகையும் 9). ராதை தனது எட்டு சகிகளுடன் வந்தேன் என சொல்லாமல் சொல்கிறாளோ!

அன்று காலை முதல், ஸ்ரீஸ்வாமிஜியின் திருமுகத்தை பார்க்கையில், அவர் வ்ரஜவாசியாகவே மாறிவிட்டாரோ என்று தோன்றியது. அவர் தம் விசால நெற்றியில், வ்ரஜவாசிகள் போலவே கோபிசந்தனத்தை அணிந்திருந்தார். பாகவதபவனத்துள் நுழையும்பொழுது, ஸ்ரீமத் பாகவதமே ரகசியமாக வைத்திருக்கும் மதுர அக்ஷரங்களான 'ராதே ராதே' எனும் அற்புத மந்திரத்தை, உரக்க பாவத்துடன் சொல்லிக்கொண்டே ஸ்ரீஸ்வாமிஜி வந்தார். பாகவதபவனத்தின் வாசலில், அழகிய கோலம் ஒன்று போடப்பட்டு இருந்தது. மாவிலை தோரணம் மற்றும் அழகிய வாழை மரம் கட்டப்பட்டு இருந்தது. திவ்யமான ராதா நாமத்தை தனது மதுரமான குரலில் சதா சொல்லிக்கொண்டே இருந்தார் ஸ்ரீஸ்வாமிஜி.

மதுரமாக ராதா நாமத்தை உரக்க சொல்லியவாறே ஸ்ரீஸ்வாமிஜி பாகவதபவனத்துள் நடந்து வருகையில், "வந்தே நந்த வ்ரஜ ஸ்த்ரீனாம் பாதரேணும் அபீக்ஷ்ணச: யாஸாம் ஹரிகதோத்கீதம் புனாதி புவனத்ரயம்" என்று சொல்லிக்கொண்டே வந்தார். அப்படி சொல்லிக்கொண்டு வரும்பொழுது, அவரது திருமுடி மேல் பனிச்சென்று ப்ருந்தாவன ரஜஸ் மிளிர்ந்து கொண்டிருந்ததை, அனைவராலும் பார்க்க முடிந்தது.

உத்தரபிரதேசத்திலிருந்து நமது பாடசாலையை சேர்ந்த, இரு சாம வேத பண்டிதர்கள் வந்திருந்தனர். அவர்களே வ்ரஜவாசிகள்தானே! ஸ்ரீமாதுரீஸகிக்கும் ஸ்ரீப்ரேமிகவரத டாகுர்ஜிக்கும், அன்று ப்ரஸாதம் தயார் செய்யும் பாக்யம் அவர்களுக்கே கொடுக்கப்பட்டது. ஸ்ரீராதாராணிக்கு, பர்ஷானாவில், என்னவெல்லாம் ஆசை ஆசையாக, வகைவகையாக, செய்து சமர்ப்பிப்பார்களோ, அதே போல்தான் அன்று திவ்ய தம்பதிகளுக்கு இங்கும் நடந்தது!

காலையில், ஸ்ரீஸ்வாமிஜி ராதாஷ்டமியை எப்படி கொண்டாட போகிறார்களோ என அனைவரும் ஆவலுடன் காத்து கொண்டிருந்தனர்.

வந்திருந்த பக்தர்களின் நயனத்திற்கு ஆனந்தமாக இருக்ககூடிய தம்பதிகளை பக்தர்களிடமிருந்து பிரித்துவிட்டோமே என்ற வெட்கத்துடன், அந்த விசாலமான திரையும் விலகியது. ராதையும் கண்ணனும் கல்பவ்ருக்ஷ வாஹனமான காமதேனுவில் எழுந்தருளியிருந்தனர். ஸ்ரீராதையைத்தான், ஸ்ரீஸ்வாமிஜி எப்பொழுதும், அனைத்து வளங்களையும் அருளும் திவ்ய காமதேனு என்பார்கள். மிக பொருத்தமாக அன்று காமதேனுவே வாகனமாக இருந்தது.

திவ்ய தம்பதிகள் அழகான கோலம் போட்டு இருந்த இடத்திற்கு எழுந்தருளியவுடன், சம்பிரதாயமான பூஜை நடைபெற்றது. நம்மேல் சதா அருள்மழை பொழிய கொஞ்சமும் சலியாத திவ்ய தம்பதியினர் மேல், ஸ்ரீஸ்வாமிஜி, மல்லிகை, தாமரை, வ்ருக்ஷி, முல்லை என்று வண்ண வண்ணமான பூக்களை கொண்டு ஒரு பூமழையையே அவர்கள் மேல் பொழிந்தார்கள்.

நாச்சியார் திருமொழியை அனைவரும் பாடிக் கொண்டிருக்க, அர்ச்சனையை ஸ்ரீஸ்வாமிஜி தம் திருக்கரங்களாலேயே செய்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜி, அர்ச்சனை மற்றும் சம்பிரதாய பூஜைகளுக்கு பின்னர், ஸ்ரீராதாராணியின் சரிதத்தை பாராயணம் செய்தார்கள். தொடர்ந்து ராதையின் சிறுவயது லீலைகளை, தமக்கே உரிய தேன்தமிழில், அனைவருக்கும் எடுத்து கூறி, பர்ஷானாவுக்கே அழைத்து சென்று விட்டார்கள். பர்ஷானாவில், வ்ருஷபானு தேவருக்கும் கலாவதி தேவிக்கும் மகளாக அவதரித்தாள் ஸ்ரீராதை. க்ருஷ்ண கீர்த்தனம் கேட்டால்தான், சந்தோஷமடைந்து தனது பால்ய அழுகையை நிறுத்துவாளாம். அவளது லீலைகள் அனைத்தையும், அழகாக எடுத்து சொன்னார்கள். நந்தகோபரும் யசோதையும் பர்ஷானா வந்தார்களாம். ஏன், நந்தகோபர்தான் ராதைக்கு ராதை என பெயரும் வைத்தார் என, மிக ரசமான பாவங்களை எல்லாம் ஸ்ரீஸ்வாமிஜி எடுத்து சொன்னார்கள். ஸ்ரீராதையின் ரகசியத்தை சொல்லி, தனது ப்ரவசனத்தையும் பாராயணத்தையும் பூர்த்தி செய்து கொண்டார்.

காலையில் சம்பிரதாயமான பூஜை செய்த ஸ்ரீஸ்வாமிஜி, மாலையிலோ கோலாஹலமான புறப்பாட்டை ஏற்பாடு செய்தார். திவ்ய தம்பதிகள் புறப்பாட்டை கண்டருளுகையில், ஸ்ரீராதையின்மேல் அழகான கீர்த்தனங்களை பாடிக்கொண்டே வந்தனர். திவ்ய தம்பதிகள் அழகான வாணவேடிக்கைகளை கண்டவாறும், ஸ்ரீஸ்வாமிஜியின் அழகான கீர்த்தனங்களை கேட்டு ரசித்தவாறும், ஸ்ரீஸ்வாமிஜியின் பூமழையில் களித்தவாறும் வந்தது, அனைவருக்கும் கண் கொள்ளா காட்சியாக இருந்தது.

புறப்பாடு முடிந்து திரும்பி வருகையில், ஒரு அழகிய புஷ்ப ஊஞ்சலில் திவ்ய தம்பதிகளை எழுந்தருள செய்தார் ஸ்ரீஸ்வாமிஜி. சத்சங்க சிறுமிகள் நளினமாக கோலாட்டம் ஆடி, அதை திவ்ய தம்பதிகளுக்கே சமர்ப்பித்தனர். ஸ்ரீஸ்வாமிஜியும் அங்கிருந்த பக்தர்களும், மேலும் ராதாதேவி மேல், கீர்த்தனங்களை பாடி மகிழ்ந்தனர். ‘ராதை பிறந்தனளே, ராதை பிறந்தனளே, எங்கள் ராதை பிறந்தனளே’ என்ற இனிமையான கீர்த்தனம் மதுரபுரியே மணக்க செய்தது. அன்று வ்ருஷபானு-கலாவதி தம்பதியினர் ரூபமாக, ஒரு தம்பதியினர் பீஜ தானம் செய்தனர். இப்படி ஒரு அற்புதமான திவ்ய வைபவத்தை கொண்டாடும் பாக்யத்தை, இம்முறை ஸ்ரீமாதுரீஸகிதேவி நமக்கு தந்தருளினாள்.

# ஸ்ரீ ராதிகா பஞ்சகம்

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

நந்தினீம் பானுகோபஸ்ய ப்ருஹத்ஸானுபுரேஷ்வரீம் I

ஸேவே த்வாம் ராதிகே பக்த்யா கிருஷ்ணபக்தி விவ்ருத்தயே II

**பானுகோபகுமாரியும், பர்ஷாணாவின் ராணியுமான உன்னை, ஹே ராதே! க்ருஷ்ண பக்தி வளர்வதற்காக பக்தியுடன் ஸேவிக்கிறேன்.**

கிருஷ்ணப்ரேம மஹாபாவ லக்ஷணானி விஷேஷத: I

த்வாமேவாஷ்ரித்ய ராஜந்தே ராதிகே மாதுரீஸகி II

**க்ருஷ்ணப்ரேமையில் உண்டாகும் எல்லா பாவலக்ஷணங்களும் உன்னிடமே விசேஷமாக விளங்குகின்றன, ஹே ராதே! மாதுரீ ஸகி!**

கிருஷ்ணபக்திப்ரதப்ரேமஸ்புரன்ம்ருக விலோசனாம் I

தீர்க ஷ்யாமளவேணீஞ்ச ராதிகாமநிஷம் பஜே II

**க்ருஷ்ண பக்தியை அனுக்ரஹம் செய்யக்கூடிய ப்ரேமை ததும்பும் மான் போன்ற கண்களுடையவளும், நீண்ட கருத்த கூந்தல் உடையவளுமான ராதிகையை எப்பொழுதும் பஜிக்கிறேன்.**

ம்ருதுளாங்கீம் மஞ்சுவாணீம் மாதுரீம் மதுபாஷிணீம் I

மராலகாமினீம் தேவீம் ராதிகாம் ஹ்ருதி பாவயே II

**ம்ருதுவான அங்கங்களை உடையவளும், மஞ்ஜுளமான குரலுடையவளும், இனிமையே உருவான மாதுரீஸகியும், தேன் ஒழுக பேசுபவளும், ஹம்ஸம்போல் நடப்பவளுமான ராதிகையை ஹ்ருதயத்தில் பாவிக்கிறேன்.**

மரகதமணிஸ்தம்ப ராஜத்சௌதாமினீம் யதா I

கிருஷ்ணமாஷ்லிஷ்ய திஷ்டந்தீம் ராதிகாம் சரணம் பஜே II

**மரகதஸ்தம்பத்தின் மேல் மின்னல் கொடியை போல் க்ருஷ்ணனை அணைத்து நிற்கும் ராதிகையை சரணடைகிறேன்.**




# ராதாஷ்டமி அன்று ராதாதேவியின் தியானம்

## தன்னுடைய வீட்டை துறந்து ராதாதேவி பிருந்தாவனத்திற்கு செல்லுதல் I அவளை தொடர்ந்து சந்திராவளியும் செல்லுதல்.

**வனங்கள், புஷ்பகொடிகள், செடிகள் அடர்ந்த காடுகளில் ராதாதேவி செல்கின்றாள். கீழே இலைகள், சரகுகள், எல்லாம் உதிர்ந்து கிடக்கின்றன. பறவைகள், மயில்கள், வன விலங்குகள் நிறைந்த பிரதேசம். யமுனை கரைபுரண்டு ஓடுகின்றது. நீர் ஸ்படிகம் போலே தூய்மையாக இருக்கின்றது! நள்ளிரவு நேரம். யமுனை ஓட்டத்தின் சப்தம் சலசலவென கேட்கின்றது. "ஒ" என்ற ஓசையுடன் நதி ஓடுகின்றது! ஆகாசத்தில் ராகா சந்திரன். விண்மீன்கள் மத்தாப்பில் இருந்து பலவிதமான வர்ண பொறிகள்போல் இறைந்து கிடக்கின்றன! மனிதர்களே இல்லை, கட்டிடங்களே இல்லை. ராதை ஏதோ பிரமை பிடித்தவள்போல் ஓடுகிறாள். மஞ்சள் நிற புடவை அணிந்திருக்கின்றாள், அதில், சிறிய நீலநிற பூ வேலைபாடுகள். மேலாக்கு காற்றில் சற்றே பறக்கின்றது. ராதையின் கண்களில், பிரேமை பொங்கி வழிகின்றது. பார்வை மேல்நோக்கி இருந்தாலும், இதற்குமேல் என்னால் தாங்கமுடியாது என்று சொல்லியபடி கிருஷ்ணனை தேடுகின்றது! கண்களில் ஒருவித கலக்கம், பத்மினி ஜாதி பெண்களுக்கு உரிய ஒடிந்து விழும் போன்ற இடுப்பு. பின்னிய கூந்தல் அழகாக பின்புறம் நீண்டு தொங்கி கொண்டிருக்கின்றது. வாய் தன்னை அறியாமலேயே, 'க்ருஷ்ண!**

க்ருஷ்ண!' என்று முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றது. பாவலக்ஷணங்கள் மேலோங்கி ராதை 'ஸ்தப்தம்' என்ற நிலையை அடைந்து விடக்கூடாது என்ற கவலையுடன், இரு கைகளையும் பின்னால் அணைக்கும் பாவனையில் - ஆனால் தொடாமல் - முகத்தில் கலக்கம், பயம் போன்றவற்றுடன் சந்திராவளி பின் தொடர்கின்றாள். சந்திராவளி தன் பின் தொடர்வதை ராதை அறிந்தவளாக இல்லை. ராதையின் இத்தகைய நிலையை கண்டு பறவைகள், மீன்கள், மான்கள் எல்லாம் ஸ்தம்பித்து நின்றபோதிலும், அவைகளுக்கும் க்ருஷ்ண விரஹம் ஏற்பட்டு, பக்திபாவனையில் ஒன்றான துக்கத்தை அடைந்தது. ராதையின் காலில் உள்ள கொலுசு கூட 'நான் சப்தம் போட்டால், அந்த சப்தம் ராதையின் பாவத்திற்கு பிரதிகூலமாகி விடுமோ' என்று சப்தம் செய்யவில்லை. இனிமையான வேணு கானம் கேட்கும் திசையை எல்லாம் நோக்கி, ராதை அங்கும் இங்குமாக ஓடலானாள். இந்த ராதையை, ராதாஷ்டமி தினத்தில், நானும், மானசீகமாக பின் தொடர்கின்றேன்.

கம்பெனி ஒன்றில் ஊதிய உயர்விற்கான சமயம் வந்தது. அதன் நிர்வாகம் ஊதிய உயர்வை சரியாக தரும் என்று பெயர் பெற்றிருந்தது. அதனால் ஊழியர்களிடையே எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. ஆனால் அவ்வருடம் ஊதிய உயர்வு கிடைக்க போவதில்லை என கேள்விப்பட்ட ஊழியர்கள், வருத்தமுடன் ஒன்று கூடி, மேலாளரை அணுகி பேச போனார்கள். அவர்களை வரவேற்ற மேலாளரோ, ஒரு தாளை காட்டி, "இதோ லாப-நஷ்ட கணக்கு; பாருங்கள்" என கொடுத்தார். அதை பார்த்த உடனேயே, ஊழியர்கள், தங்களுக்கு அந்த வருடம் ஊதிய உயர்வு கிடைக்க வாய்ப்பு - இல்லை என, புரிந்து கொண்டு, திரும்பினர்.

அதுபோலத்தான், அக்ஞானத்தில் இருக்கையில் கஷ்டம் வந்தால், "கடவுளே! எனக்கு ஏன் இந்த கஷ்டம் வந்தது? என்னால் தாங்க முடியவில்லை. நான் என்ன தவறு செய்தேன்?" என்று கேட்பான். ஆனால், ஞானம் வந்தாலோ, ப்ராரப்தப்படி (கர்ம வினைப்படி) உலகம் ஒரு ஒழுங்கில் நடக்கிறது என்பதை புரிந்து கொள்கிறான். அதனால் அனுபவிக்க கஷ்டம் எனினும், அதை ஏற்று கொள்கிறான்.

~ ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

ராதாஷ்டமி அன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் என்னிடம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அவருடைய மனதில் ஓடிக்கொண்டிருந்த சிந்தனைகளை என்னுடன் பகிர்ந்து கொண்டார். அவை ....

1. ராதையின் அருகாமையில் சென்றாலே ப்ரேம பக்தி வரும். அவளுடைய கடாக்ஷத்தினால், அது நவம் நவமாக வளரும். அவளுடைய அனுக்ரஹத்தால், அது உன்னத ஸ்திதியை அடைந்து உன்மத்தமாக்கும்.
2. ராதையின் பிரேமை துதும்பி வழியும் கண்கள், எந்த தெய்வத்திற்கும் கிடையாது.
3. ராதை என்றுமே கிருஷ்ணனை அடைய போவதில்லை. ஏன் சொல் பார்க்கலாம்? என்றார். நான் பதில் தெரியாமல் விழித்தேன். ராதையின் பின்னாலேயே கண்ணன் சென்று கொண்டிருப்பதால் என்றார்.

~ ஸ்ரீ ராமானுஜம்




# காஞ்சியில் ஆனி கருட சேவை-3

ஸ்ரீ ராமானுஜம்



**இரவு புறப்பாடு:** 8.30 மணி ஜூலை 13, 2016

கருட சேவையின் நினைவிலேயே நமது சத்குருநாதர் இருந்தார்கள். ஸ்ரீவரதனின் அழகையும் கருடாழ்வார் ஏந்தி சென்ற அழகும், அலங்காரங்களின் பாங்கும் திரும்ப திரும்ப சொல்லி கொண்டிருந்தார். வரதரும் திரும்பி வந்தார். ஸ்ரீவரதர் கோயிலுக்கு திரும்பிவிட்டார் என்றவுடன் நமது ஸத்குருநாதர் உடனே புறப்பட்டு விட்டார். நமது GOD USA Houston நாமத்வாரை சேர்ந்த திரு.ஜீவன் குடும்பத்தினரும் இதில் கலந்து கொள்ளும் பாக்கியம் பெற்றனர்.

ராஜகோபுரம் தாண்டி, கல்மண்டபம் தாண்டி, கோயில் கொடிமரம் அருகில், ஆனந்தசுரஸ் போகும் பாதையில் ஒரு நாற்பதே பக்தர்கள் புடைசூழ ஸ்ரீவரதர் எளிமையான புறப்பாடு கண்டருளினார். கையில் நீண்ட தாழம்பூ, தொப்பாரம் அணிந்த திருமுடி, ஸ்ரீவைணவர்கள் திருப்பாதங்கள் தாங்கி, பெரியாழ்வார் அருளிச்செயல்களை இதயபூர்வமாக பாராயணம் செய்து வர, ஒரு நாதஸ்வர கச்சேரியுடன் ஒரு திவ்ய மணவாளனாய் நமது வரதராஜர் உலா வந்து கொண்டிருந்தார். நமது சத்குருநாதரின் திருமுகத்தில் ஆனந்த பூரிப்பு நர்த்தனம் ஆடிற்று; அது அவ்வப்போது ஆனந்த ரசனையுடன் அவரது சிரசை அங்கும் இங்கும் ஆடவும் வைத்தது. அவரது தாமரை கைகள் கச்சேரிக்கேற்ப தாளம் போட்டு கொண்டிருந்தன. கண்கள் வரதரையே அப்படியே பருகுவதை போல், பார்த்தவண்ணம் இருந்தன. கூட்டம் என்றாலே நமது குருநாதர் ஒதுங்கித்தான் இருப்பார். அதுவும் கோயில்களில் உத்ஸவ காலங்களில் நாமே பார்த்திருக்கிறோம். ஒதுங்கியே பெருமாள் தரிசனம் செய்யவே நம் ஸ்ரீஸ்வாமிஜி விரும்புவார். கூட்டத்தை அதிக்ரமித்து, செல்ல விரும்ப மாட்டார். ஒருவித திவ்யமான கூச்ச ஸ்வபாவம்தான் அங்கு நம்மால் பார்க்க முடியும். அவரை கொண்டு இவரை கொண்டு எப்படியாவது பெருமாள் அருகில் சென்று தரிசிப்பதை அவர் விரும்பவும் மாட்டார். அப்படி செய்யக்கூடாது என்று எங்களிடம் சொல்லி வருவார். இது இப்படி இருக்க, இருட்டில், ஓரமாக ஒதுங்கி தரிசனானந்தத்தில் திளைக்கும் நமது சத்குருநாதரை அருகில் அழைக்க ஸ்ரீவரதராஜர் திருவுள்ளம் கொண்டார்போலும்.

ஸ்ரீவரதருக்கு புறப்பாட்டின்பொழுது ஆராதனை செய்யும் ஸ்ரீவைணவ பெரியார் ஒருவர் எப்படியோ நமது ஸத்குருநாதர் இருப்பதை கண்டு, அவரிடம் ஓடோடி வந்து, வரதரை அருகில் வந்து தரிசிக்கலாமே என்றார். ஸ்ரீ ஸ்வாமிஜியும் இங்கே இருந்தே தரிசிக்கிறேன் என்பதுபோல் கையைக்காட்டியும் கேட்டது, கரம் பற்றி இட்டு செல்லாததுதான் குறை; கொண்டு நமது சத்குருவை வரதருக்கு நேரே நிறுத்தி விட்டார்!!!

கைகூப்பி நமது குருநாதர் ஆனந்தமாய் வரதரை தரிசித்து வந்தார். வரத கரத்தில் தாழம்பூ, ஒரு எளிமையான மல்லி மாலை, அதுதான் திண்டுமாலையை தாங்கும் மாலை தாங்கியாம். அதற்குமேல், மல்லி திண்டு மாலை, ஆங்காங்கே ஜரிகையை போல் விருட்சி பூவை சேர்த்து அழகாக இருந்தது. நாதஸ்வர குழுவினர் விஜய்கார்த்திகேயன் குழுவினர், அப்போது 'எந்தரோ மஹானுபாவுலு' என்ற ஸ்ரீராகத்தை கேட்டு, அதனுடன் ஸ்ரீவரதரின் பால், அனுராகத்தையும் சேர்த்து அனுபவித்து வந்தார் நமது சத்குருநாதர்.

அவ்வப்போது ஸ்ரீவைணவ பெரியோர்கள் நமது சத்குருவை பார்த்து அன்போடு சிரித்து, கைகூப்பி, தலையாட்டி தனது ப்ரேமையை தெரிவித்த வண்ணமே இருந்தனர். ஒருவரிடம் ஸ்ரீ ஸ்வாமிஜி 5நிமிடம் பேசி கொண்டிருந்தார். இருவரும் ஒரே ஆனந்த புன்னகையுடன் சம்பாஷித்தனர். அது என்ன என்று கேட்க எங்களுக்கு தாபம். முடிந்ததும், நமது கருணைகடலான சத்குருநாதர் அருகில் வரவழைத்து சொன்னார்.

'நமது ஸ்ரீவரதர் உபய நாச்சியாரோடுதானே உள்ளே புறப்பாடு கண்டருள வேண்டும். இன்று 'ஸ ஏக:' என்று தான் ஒருவர் மட்டும் என்று எழுந்தருளி இருக்கிறார் என்று கேள்வி வந்தது. ஏன் தெரியுமா? இன்று ஸ்ரீபெரியாழ்வார் திருநக்ஷத்திரம். பெரியாழ்வார் சன்னதிக்குத்தான் ஸ்ரீவரதர் எழுந்தருள போகிறார். பெரியாழ்வாரும் 'ஒரு மகளையுடையேன். உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல் வளர்த்தேன்; செங்கண்மால் தான் கொண்டு போனான்' என்று பாடுகிறார். தன் மகளான ஸ்ரீஆண்டாளான ஸ்ரீகோதா நாச்சியாரை பெரியாழ்வார் பெருமாளுக்கு கொடுத்தாரன்றோ? பெருமாளும் தனது மாமனார் சன்னதிக்கு செல்வதால், தனது ஸ்ரீதேவி பூதேவியோடு போனால், ஆழ்வார், தன் மகளை அன்பாக வைத்து கொண்டிருக்கிறாரா. இப்படி இரண்டு தேவிகளுடன் வருகிறாரே என்று எண்ணக்கூடும். ஆகவே, பெருமாள் ஆழ்வாரின் மனநிலையை கருதி தனித்தே பார்க்க வருகின்றாராம்.

என்ன ரஸமான ஒரு விஷயத்தை நமது சத்குருநாதர் அருளினார்! இப்படி அர்ச்சாவதாரத்தையும் விபவாவதாரத்தையும் (ராமன், கிருஷ்ணன் போன்ற அவதாரங்களையும்) சேர்த்தே பார்ப்பதுதான் நமது சத்குருநாதரின் இயல்பு. நமக்கும் அதையேதான் கருணையோடு சொல்லித்தருகிறார் பாருங்கள்!

(வரதர் வருவார்...)

# ராமநாத ப்ரம்மச்சாரி-2

மற்றோர் சமயம் முருகனாரின் மாமனாரான தண்டபானி ஸ்வாமிக்கும் (இவர் நல்ல உயரமான பலசாலி), ராமநாத ப்ரம்மச்சாரிக்கும் ஏதோ ஒரு சிறு பிணக்கு ஏற்பட்டது. தண்டபானி ஸ்வாமிக்கு முன் மிகவும் மெலிந்து காணப்படும் ராமநாதனை அவர் கீழே பிடித்து தள்ளி கோபமுடன் “நான் யார் தெரியுமா” என்று கேட்டார். ராமநாத ப்ரம்மச்சாரியோ அதற்கு கொஞ்சமும் பயப்படாமல் சளைக்கமல் கைகளை கூப்பி, ஸ்வாமி நான் யார் என்ற விசாரம் செய்து நம்மை அறியத்தானே நாம் எல்லாம் இங்கு கூடி இருக்கிறோம் என்றார். நான் யார் என்ற வரிகளை கேட்டவுடன் தண்டபானி ஸ்வாமியின் கோபம் பறந்து போனது. தம் செயலுக்கு வருந்தி ராமநாதனிடம் மன்னிப்பு கேட்டு கொண்டார். மேலும் தாமாகவே பகவானிடம் சென்று நடந்தை சொல்லி வருந்தினார். அதை கேட்ட பகவான் அழகான புன்னகையை உதிர்த்தார். ஆஸ்ரமத்திற்கு கீரைப்பாட்டியின் அம்சமான பசு லக்ஷ்மியை முதன்முறையாக தன் உரிமையாளர் கொண்டு வந்து கொடுத்தபொழுது, சிறுத்தை, புலிகளின் ஆபத்து இருக்கிறதே, பசுவை யார் பார்த்து கொள்வார்? என்று கேள்வி வந்தது. பகவானும் “காட்டு மிருகங்களிடம் இருந்து ஆபத்து இருக்கிறது. யார் இதை பார்த்து கொள்வார்? அப்படி யாராவது இருந்தால், இந்த பசு இங்கு இருக்கலாம்தான்” என பொதுவாக சொன்னார். அப்பொழுது நான்கரையடியே உயரமான ராமநாத ப்ரம்மச்சாரிதான் “பகவான்! நான் பார்த்து கொள்கிறேன்” என சொன்னார். அப்படித்தான் ரமணாஸ்ரம கோசாலை உருவானது.

திருவண்ணாமலைக்கு ரெயில் இரவு எட்டரை மணிக்குத்தான் வரும். ஆனால் ஆஸ்ரமத்தில் ஏழு மணி இரவு உணவு உண்ட பின், பெரும்பாலானோர் ஏழரை மணிக்கெல்லாம் படுத்துக்கொள்ள சென்றுவிடுவர். பகவானுக்கோ யாராவது ஆஸ்ரமத்திற்கு வரும் பக்தர்களை பார்த்து அவர்களுக்கு தேவையானதை செய்தால் நல்லது என விருப்பம் இருந்தது. அப்பொழுது ராமநாதன்தான் தாம் அப்பொறுப்பை ஏற்று கொள்வதாக சொன்னார். தினம் அன்பர்கள் வருகையில் அவர்களை வரவேற்று தேவையானதை செய்து விட்டுத்தான் படுக்க போவார். பகவானும் மறுநாள் காலையில் ராமநாதனை

பார்த்து "பேஷ், பேஷ், நேற்றைக்கு அவர்களை கவனித்து கொண்டாயா. நல்லது நல்லது" என புன்னகையுடன் விசாரிப்பார். ஒருமுறை பகவானுடன் எல்லோரும் கிரிவலம் சென்றபொழுது, ஒவ்வொருவரும் ஏதோ ஒரு ஆன்மீக விஷயத்தை பற்றி பேசவேண்டும் என முடிவானது. அப்பொழுது ராமநாதன் ஒரு பரவசத்தில் "ரமணரை சிவபெருமானாகவும் அவருடைய பக்தர்களை சிவபூதகணங்களாகவும் சித்தரித்து பேசினார். பின்னர், பகவானும் பிறரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அதையே தமிழில் செய்யுளாகவும் எழுதினார். அதன் முதல் வரி "திருச்சுழி நாதனை கண்டவுடனே எனக்கு தேகவுணர்வு அற்று போனது; என் நாதன் எனக்கு அக்கணமே திரும்பி வர இயலாத ஆன்ம ஞானத்தை தந்தருளினான்" என்று பொருள்பட வரும்.

என் அன்னை ரமணரின் தீவிர பக்தை. அவளுக்கு ராமநாத ப்ரம்மச்சாரியை மிகவும் பிடிக்கும். நான் ஒருமுறை என் அன்னையிடம், காவ்யகண்டர், முருகனார், சிவப்ரகாசம்பிள்ளை, சாதுஓம் என பலர் பாடியுள்ளனரே. உனக்கு எந்த பாடல் பிடிக்கும் என்று கேட்டேன். அதற்கு என் அன்னை, ராமநாத ப்ரம்மச்சாரியின் அந்த பாடலைத்தான் குறிப்பிட்டு சொன்னார்கள். அப்பாடலில், "திருச்சுழிநாதனை கண்டது முதல் மற்றொன்றையும் காணாதபடிக்கு நான் இருந்துவிட்டேன். கருணாமூர்த்தியாக கதியற்றவர்களுக்கு அரணாக இருந்து காத்து அருளி, தில்லையில் ஆடும் நடனசபேசன் அந்த திருச்சுழிநாதன்தான். அவனே புனித அண்ணாமலை விருபாக்ஷி குகையில், இறைவனாக எழுந்தருளினன். காயபுரியில்(தேகம்) ஜீவன், கரணங்களை(ஞான, கர்ம இந்திரியங்கள்) பிரஜைகளாக வைத்து கொண்டு, அகங்கார மந்திரியுடன் அராஜக ஆட்சி செய்து கொண்டிருந்தான். சில காலம் கழித்து, ஜீவன் பகவானின் அனுக்ரஹ வாளை எடுத்து, அஹங்கார மந்திரியின் தலையை வெட்டி வீழ்த்தினான்.

அப்படி செய்த பின், தஹராலய குகையில் (ஹிருதாயாகாசம்) கூத்தாடும் பிரானுடன் ஜீவன் பிரகாசமாய் வீற்றிருந்தான்; அந்த நாதன் இந்த திருச்சுழிநாதனே; இவனை நான் அங்கு கண்டபின், அங்கேயே திரும்பி வர இயலாதபடிக்கு இருந்து விட்டேன்" என்று வருகிறது.

1946இல் உடல் சுகவீனமுற்று தற்போது சென்னை எனப்படும் மதராசிற்கு வந்து சிகிச்சை செய்த போதும், ராமநாத ப்ரம்மச்சாரி உடல் துறந்தார். அதை கேள்விப்பட்ட பகவான், கொஞ்சமும் பேசாமல் முற்றிலும் மௌனம் காத்தார். அது 1946இல் மிகவும் ஆச்சரியமான விஷயம். அப்பொழுது நூற்றுக்கணக்கானவர் குழுமி இருந்தும், பகவான் தன் மயமாகி போனது குறிப்பிட வேண்டிய விஷயம்.



**நன்றி:**
**ரமண பெரிய புராணம்**
**ஸ்ரீகணேசன்**



மதுரபுரி ஆஸ்ரமத்தில் ப்ரஹ்மோத்ஸவம் ஆகஸ்ட் 26 - செப்டம்பர் 4, 2016










**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**




**Gururam Consulting Private Ltd**




ஸ்ரீ வல்லபதாஸ் அவர்களின் சத்சங்கம்,
விவேகானந்தா வித்யாலயா, அகர்மேல், 9 Sep 2016



ஸ்ரீ ராமஸ்வாமி, ஸ்ரீமத் பாகவத
உபன்யாசம், எர்ணாகுளம், 18-23 Sep 2016



கன்யா சகோதரிகள், ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்,
தூத்துக்குடி நாமத்வார், 9-15 Sep 2016

புராநவா - இந்திய பாரம்பரிய வினாவிடை போட்டி, பெங்களூரு, 17 Sep 2016














பூர்ணிமாஜி-குமாரி காயத்ரீ, ஸ்ரீமத் பாகவத சப்தாஹம், மதனகோபால ஸ்வாமி கோவில், மதுரை, 25 Sep - 1 Oct 2016
திருச்சி நாமத்வார், 17-24 Sep 2016







குமாரி ப்ரியங்கா, இந்தோனேஷியா சத்சங்கங்கள், 12-29 Sep 2016

# சத்சங்க செய்திகள்

## ஆகஸ்டு 26 — செப்டம்பர் 4

சென்னை ப்ரேமிகபவனத்தில் க்ருஷ்ண ஜயந்தி உத்ஸவம் கொண்டாடப்பட்டது. மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் 23வது ப்ரஹ்மோத்ஸவம் மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பக்தர்கள் மத்தியில் பல்வேறு வாஹனங்களில், ஜொலிக்கும் அலங்காரதுடன் பவனி வந்த மாதுரீஸகியையும் ப்ரேமிகவரதனையும் காண கண்கள் பெரும் பாக்யம் செய்திருக்க வேண்டும். கஜேந்திரஸ்துதியை பக்தர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் சேர்ந்து பாட, நிஜ கஜமே தாமரை கொண்டு, “நாராயணா! அகில குரோ..” என்று ஸ்ரீ ப்ரேமிகவரதன் மீது பூ சொரியவும், ஐராவதமே வந்து கோவிந்த பட்டாபிஷேகத்தில் ஆகாஸகங்கையால் திருமஞ்சனம் செய்தும் வண்ண மலர்களால் வர்ஷித்தும் பகவானை புறப்பாடு கண்டருளி ஆனந்தம் அடைந்ததுபோலும், திருமங்கை மன்னன் கலியன், குதிரையில் வந்த திவ்ய தம்பதிகளை வழிமறித்து மந்திரோபதேசம் பெற்ற வைபவமும், மஹாமந்திர கீர்த்தன அருள்மழையை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் புறப்பாடுகளில் வாரி வாரி தந்தருளியதும், வேதம், ப்ரபந்தம், பாகவதம் வாடவே வாடாத பக்தர்களின் பாமாலைகளும் ப்ரேமிகவரதனின் செவிகளுக்கு ஆனந்தம் கொண்டு வந்ததையும், நிகுஞ்சத்தில் அமர்ந்தவாறு பகவான் கான இசையான தேன்மாரியை கேட்டதுவும், ஆழ்வார்கள் அனுபவித்தபடி ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பகவானை கொண்டாடி மகிழ்ந்ததும், ஜானவாஸத்தில் நாதஸ்வரத்திலும் நோட்ஸ் இசையிலும் மகிழ்ந்த திவ்யதம்பதியினருக்கு முப்பத்து முக்கோடி தேவர் வர திருக்கல்யாணத்தை ஸ்ரீ ஸ்வாமிஜி நிகழ்த்தியதும், இப்படி அனுதினமும் பத்து நாட்கள் இனிமையாக பறந்தோட, ஸிம்மாஸனத்தில் அமர்ந்து கம்பீரமாய் வந்த பகவான் அதே ராஜ களையுடன் மாதுரீஸகியை உடன் இருத்தி, ரதோத்ஸவமும் கண்டு அருளினான். அவப்ருத ஸ்நானமும், ஆஞ்சநேய உத்ஸவமும் அழகாக நடந்தேறியது. அன்பர்களுக்கு தினமும் எல்லா காலங்களிலும் விமர்சையாக பிரசாதமும் அளிக்கப்பட்டது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அனுக்ரஹித்த கோபாலனின் பால லீலைகளும் தினமும் உத்ஸவத்தில் இடம் பெற்றது. பாகவதோத்தமர்களின் பஜனை, திவ்யநாம கீர்த்தனம், உஞ்சவ்ருத்தியும் நடைபெற்றது.

## செப்டம்பர் 16-19

சைதன்ய குடீரம். ஆண்டு விழா வைபவம் மிக கோலாஹலமாக கொண்டாடப்பட்டது. மதுரமான மஹனீயரில் சைதன்ய குடீரத்தின் மேன்மைகளை பார்க்கவும்

## செப்டம்பர் 17

புரட்டாசி மாத பிறப்பு - மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் பக்தர்கள் துளஸீ மாலையணிந்து கன்யா மாத விரதம் இருக்க துவங்கினர். சனிக்கிழமைதோறும் உத்ஸவர் கிராமங்களுக்கு புறப்பாடு கண்டருளினார்.

## செப்டம்பர் 17

**GOD — Bengaluru** சார்பில், பெங்களூரு பாரதீய வித்யாபவனில் நடைபெற்ற புரானவா - வினா விடைபோட்டியில் **86** பள்ளிகளிலிருந்து **250**க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டார்கள். இதில் **ITI — KR Puram** பள்ளி முதலிடம் பெற்றது. சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்திய பெங்களூரு காட் சத்சங்கத்தினர் கலந்துகொண்ட மாணவர்களுக்கு பரிசு வழங்கினர்.

## செப்டம்பர் 18-20

காஞ்சீபுரம் கீர்த்தனாவளி மண்டபத்தில் ப்ரஹ்மஸ்ரீ **R.**பாலாஜி சர்மா அவர்களால் அதீதிஸ்தவம் ஸ்தோத்ர உபன்யாசம் நடைபெற்றது.

## செப்டம்பர் 24,25

காஞ்சீபுரம், கீர்த்தனாவளி மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் மாதுரீ ஸகீ — ஸ்ரீ ப்ரேமிகவரத திவ்யதம்பதியினருக்கு ராதாகல்யாண மஹோத்ஸவம் பாகவத ஸம்ப்ரதாயபடி நடைபெற்றது.

# பாலகர்களுக்கு ஒரு கதை



## பட்டம் சொன்ன பாடம்

சிறுவன் ராஜாவிற்கு அன்று குதூஹலம். தான் எவ்வளவு அழகாக பட்டம் விடுகிறோம் என்று அம்மாவும் பார்க்க வேண்டும் என்று, அம்மாவின் அருகில் அமர்ந்து, அழகாக பட்டத்தை பறக்க விட்டு கொண்டிருந்தான். அந்த பட்டம் மேலே பறந்து கொண்டிருந்தது. அவன் நூலை இழுத்து இழுத்து, மேலே பறக்க விட்டு கொண்டிருந்தான். நன்றாக மேலே பறந்தது பட்டம். அம்மாவும் ராஜாவும் சந்தோஷப்பட்டார்கள். பல வண்ணம் கொண்ட அந்த பட்டமும், அதன் வாலும் காற்றில் அழகாக ஆடி ஆடி பார்ப்பதற்கு அழகாக இருந்தது. அப்பொழுது ராஜாவிற்கு ஒரு எண்ணம். இந்த நூல், பட்டத்தை பிடித்து கொண்டு அதை இன்னும் மேலே பறக்க விடாமல் தடுக்கிறதோ என்று ஒரு எண்ணம். உடனே ராஜா அம்மாவை பார்த்து, ''இந்த நூல்தானே, பட்டத்தை மேலே பறக்காமல் தடுக்கிறது? பேசாமல் நூலை அறுத்து விட்டால் என்ன?'' என்றான்.

அன்னை சொன்னாள், ''ஏண்டா! இந்த நூலினால்தானே பட்டம் மேலே பறக்கிறது. ஒரு நன்றிக்காகவாவது அதை விட்டு வைக்கலாமில்லையா'' என்றாள். ராஜா கேட்டான், ''அம்மா! நீ சொல்வது சரி. நன்றி அவசியம்தான். ஆனால் இந்த பட்டத்திற்கு இன்னும் மேலே பறக்க வேண்டும் என்று ஆசை என வைத்து கொள்வோம். அப்பொழுதாவது இந்த நூலை வெட்டி விடலாமில்லையா'' என்றான். அன்னை உடனே, ''சரி, பட்டம்தானே, நீயே நூலை வெட்டி விட்டு பாரேன்'' என்றாள்.

ராஜா உடனே ஒரு கத்தரியை எடுத்து நூலை வெட்டி விட்டான். மறுகணம், அந்த பட்டம் துள்ளி ஜிவ்வென உயர கிளம்பியது. பாலகன் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. அன்னையை பெருமிதத்துடன் பார்த்தான். அதில், ''நான் சொன்னேன் பார்த்தாயா'' என்பது போல் இருந்தது. அம்மாவின் பார்வையோ, ''பொறுத்திருந்து பார்'' என்பது போல் இருந்தது. அவள் முகத்தில் சிறு புன்னகை தவழ்ந்திருந்தது. மேலே சென்ற அந்த பட்டம் கொஞ்சம் கொஞ்சம் கொஞ்சமாக, எங்கே செல்வதென்று தெரியாமல், அங்கும் இங்கும் அல்லாடி, கீழே வர ஆரம்பித்தது. ராஜாவின் முகம் வாடியது. அது பல மரகிளைகளில் பட்டு, கிழிந்து, ஓட்டைகள் பல அதில் ஏற்பட்டு, பின் ஒரு மின்கம்பியில் சுற்றி கொண்டது. இப்பொழுது அது சின்னா பின்னமாகி இருந்தது. பார்ப்பதற்கு குப்பை காகிதம் மாதிரி தெரிந்தது. ராஜா அதை பார்த்து வருத்தப்பட்டான். அம்மா அப்பொழுது அவனை பார்த்து, ''பார்த்தாயா பட்டத்தை. நூலை அறுத்து விட்டால், அதுகொஞ்சம் மேலே போவது போல் சென்று, அது கடைசியில் எங்கோ சாக்கடையிலோ அல்லது மின்

கம்பியிலோ மாட்டிகொண்டு தொங்குவது போலாகி விட்டது பார்த்தாயா" என்றாள். ராஜா மௌனமாக தலையசைத்தான். அம்மா அப்பொழுது, பட்டம் போனால் போகிறது. நான் சொல்வதை கேள் என்று பேச ஆரம்பித்தாள். ராஜா கவனித்து கேட்கலானான்.

"நம்மை உண்மையில் வாழ்க்கையில் வளர்த்து விடுவது யார்? அம்மா, அப்பா, தெய்வம், ஆசான் இவர்கள்தானே நம்மை உண்மையில் வளர்த்து விடுகின்றனர். தவிரவும், நாம் வளர்ந்த கலாசாரம், சமுதாயம், ஒழுக்கம், பெரியோரின் ஆசிகள் இப்படி அத்தனையும் காரணம். இவைதான் நாம் மேலே வளர காரணமாவது மட்டுமல்லாமல், நாம் மேலும் மேலும் வளர பாதுகாப்பாக, அரணாக இருக்கின்றன. பட்டத்திற்கு நூல் போல. அப்படி இருக்கையில் நமது வளர்ச்சிக்கு வளர காரணமாக இருக்கும், இவற்றின் தொடர்பை துண்டித்து கொண்டால், முதலில் வேண்டுமானால் சந்தோஷமாக இருக்கும். அது ஒரு தோற்றம்தான். ஆனால் காலப்போக்கில், எப்படி பட்டம் எங்கும் போக முடியாமல், அங்குமிங்கும் அலைக்கழிந்து சின்னாபின்னமாகியதோ, அப்படி வாழ்க்கை ஆகி விடும். ஆக சமுதாயம், ஒழுக்கம், கலாசாரம் இவை எல்லாம் நம் வளர்ச்சிக்கு உதவும். அவை, வளர்ச்சிக்கு தடை அல்ல என்பதை புரிந்து கொள்" என்றாள். எவ்வளவு மேலே மேலே பறந்தாலும், நம் விதிமுறைகளுக்கும், கலாசாரத்துக்கும் கட்டுப்பட்டு வாழ்ந்தால்தான், நன்றாக வாழ முடியும். இல்லாவிட்டால் சின்னாபின்னமாகி விடும் என்பது புரிகிறதல்லவா? என்றும் சொன்னாள். ராஜாவுக்கு நன்றாக புரிந்தது. ஆயிரம் பட்டம் பெற்றாலும், இதை எல்லாம் கற்று கொள்ள முடியுமா என்று தெரியாது. ஆனால் இப்படி சின்னதாக ஒரு பட்டம் விட்டதிலேயே, ஒரு அற்புதமான வாழ்க்கைக்கு மிக அவசியமான ஒன்றை அம்மா கற்று கொடுத்தாளே என்ற ஒரு சந்தோஷத்துடன், அவன் அம்மாவுடன் வீடு திரும்பினான்.


Dr. Shriraam Mahadevan

MD (Int Med), DM (Endocrinology)

Consultant in Endocrinology and Diabetes, Regn No. 62256

ENDOCRINE AND SPECIALITY CLINIC

New 27/1, Old 11/1, (Gr. Floor), 4th Cross Street, RK Nagar, Mandaveli, Chennai -600028

(Next to Krishnamachari Yogamandiram)

Tel: 2495 0090, Mob: 9445880090

E-mail: mshriraam@gmaill.com, www.chennaiendocrine.com

# மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

ஸ்ரீ விஷ்ணுப்ரியா

# அமோகம்

இந்த மாதம் நாம் பார்க்கப் போகும் ஸம்ஸ்க்ருத வார்த்தை - "அமோகம்" (अमोघ) என்ற சொல். இது ஒரு விசேஷணபதம், அதாவது adjective என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

பொதுவாக நாம் தமிழ் மொழியில் அமோகம் என்ற சொல்லை பயன் படுத்துவதுண்டு. "நீ அமோகமாக இருப்பாய்!" என்றெல்லாம் கூறுவதுண்டு - அதாவது நீ செழிப்புடன் வாழ்வாய் என்ற அர்த்தத்தில் உபயோகப் படுத்துகிறோம்.

ஆனால் ஸம்ஸ்க்ருத மொழியில் 'அமோக' என்ற சொல்லுக்கு "வீண் போகாத" என்று அர்த்தம். 'மோக' என்றால் "வீணான" என்று பொருள். அதற்கு எதிர்மறையான சொல்தான் 'அமோக' என்ற சொல்.

ஸ்ரீமத் பாகவதத்தில் இந்த 'அமோக' என்ற சொல் பல இடங்களில் வருகின்றது. 'அமோகலீல:', "அமோகவீர்ய:", "அமோகஸங்கல்ப:", "அமோகதர்ஷன:", "அமோகமஹிமானி", "அமோகராதஸா", "அமோகானுக்ரஹ:", "அமோககதி:", "அமோகவாக்", என்றெல்லாம் பதப்ரயோகங்கள் உள்ளன. அதாவது வீண் போகாத லீலைகளை உடைய பகவான், வீண் போகாத வீர்யமுடையவன், வீண் போகாத ஸங்கல்பம், வீண் போகாத த்ருஷ்டியை உடையவர், வீண் போகாத மஹிமைகள், வீண் போகாத அனுக்ரஹம் செய்பவர், வீண் போகாத போக்குடையவர், என்ற அர்த்தத்தில் பல இடங்களில் இந்த பதம் அழகழகாக உபயோக படுத்தியிருப்பதை நாம் பார்க்கலாம்.


அதில் அஷ்டம ஸ்கந்தத்தில் பகவத் பக்தியை "அமோகம்" என்று கூறும் கட்டத்தை இப்போது பார்ப்போம். அதிதி தேவி தனது பிள்ளைகளான தேவர்களை அஸுரர்கள் வென்று விட்டார்களே என்று கவலையுற்று கஷ்யபரிடம் தனது புத்திரர்கள் மீண்டும்

பதவியை அடைவதற்கு ஏதாவது உபாயம் கூறும்படி ப்ரார்த்திக்கிறாள். அப்போது கஷ்யபர் அதிதியிடம் பகவான் வாஸுதேவனை ஷ்ரத்தையுடன் பூஜை செய்வாயாக. அவர் உனது ஆசையை பூர்த்தி செய்வார் என்று கூறிவிட்டு - "अमोघा भगवत्भक्तिः नेतरेति मतिर्मम" என்று கூறுகிறார். அதாவது -"பகவானிடம் செய்யப்படும் பக்தியானது வீண்போகவே போகாது. மற்ற எதுவும் அத்தகையது அல்ல என்பதே என் அபிப்ராயம்" என்று உபதேசிக்கிறார். ஏகாதச ஸ்கந்தத்தில், யாதவ குலம் அழிவதற்கு காரணமாயிருந்த சாபத்தை கூறும் கட்டத்திலும் 'அமோகம்' என்ற பதம் வருகின்றது.

"श्रुत्वाऽमोघं विप्रशापं" அதாவது யதுகுமாரர்கள் ப்ராம்மணர்களிடம் ஸாம்பனை கர்ப்பிணி பெண் போல் வேஷமிட்டு, என்ன குழந்தை பிறக்கும்? என்று விளையாட்டிற்காக கேட்டவுடன், அவர்கள் குலத்தை நாசம் செய்யும் உலக்கை பிறக்கும் என்று சாபம் கொடுத்து விட்டனர். அந்த வார்த்தையை கேட்டவுடன், "அமோகம் விப்ரசாபம்" - "ப்ராம்மணர்களின் சாபமானது வீண் போகாததன்றோ!" என்று பயந்து உடனே உக்ரஸேனரிடம் ஓடிச் சென்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

ஆகையால் அமோகமான வாழ்வு என்று சொல்லும் பொழுதும் "மிகவும் பயனுள்ளதான, வீண்போகாத வாழ்வு" என்று பொருள் கொண்டோமானால் பொருத்தமாக அமையும்.

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் பகவத் கீதையில் பக்தி யோகம் பற்றி பேசியதை ஸ்ரீ M.K.ராமானுஜம் அவர்கள் தொகுத்து ஒரு புத்தக வடிவில் கொண்டு வந்துள்ளார். விலை ரூ 80/-




Bhagavata Dharma – The Path for All, Audio CD based on H.H. Maharanyam Sri Sri Muralidhara Swamiji's KALIYAYUM BALI KOLLUM, Live recording at Melbourne, Australia - 6 part lecture in English by Sri Bhagyanathanji, Organized by Global Organisation for Divinity Australia, Released by : Chaitanya Mahaprabhu NamaBhiksha Kendra. Price Rs 80/-



துயரத்திற்கு காரணமாக இருக்கக்கூடிய ஒன்று சலிப்புத்தன்மை ஆகும். ‘‘ட்ராபிக்கில்’’ (போக்குவரத்து நெரிசல்) அமர்ந்திருப்பது. துணிகளை சலவை செய்வது. மளிகை கடையில் நீண்ட வரிசையில் நிற்பது. இல்லத்தரசியின் மாறுதலேயில்லாத செயல்முறை. வேலை அல்லது கல்லூரியிலிருந்து நீண்ட விடுமுறை. செய்வதற்கு ஒன்றும் இல்லாத வார இறுதிகள். சில சமயங்களில் சலிப்புத்தன்மை ஆபத்தானதாகி விடுகிறது. ஒன்றும் செய்யாமல் வெட்டியாக இல்லாமல் இருப்பதற்கு, அதிரடியாக ஏதாவது ஒரு தொழிலைத் தேடச் செய்கிறது. அர்த்தமற்ற ஒரு வேலை செய்ய, கிசுகிசு, சூதாட்டம், கெட்ட பழக்கங்கள், குறிக்கோளற்ற பொழுதை இணையதளத்தில் இரவு பகலென கழிக்க தயாராக உள்ளனர். பல சமயங்களில் மன அழுத்தம் கொண்ட மன நிலையில் அது முடிகிறது. மிக அடிக்கடி அமைதி மற்றும் தனிமை, தவிர்க்கப்பட வேண்டிய அபாயகரமான நிலைமைகள் என்று கருதப்படுகின்றன. உண்மை என்னவென்றால், நன்றாகப் பயன்படுத்தப்பட்டால், இவை மிகவும் பேரின்பம் தரக்கூடிய சுவாரஸ்யமான நிலைமைகளாக ஆக்கப்படலாம். சலிப்புத்தன்மையை மிகச் சிறந்த முறையில் போக்க சில குறிப்புகள்.

## காலம் கடத்தக்கூடாது

பல சமயங்களில், நமக்கு "போர்" அடிப்பதில்லை, நாம் சும்மா காலம் கடத்துகிறோம். எந்தப் பணிகளை தள்ளிப் போடுகிறோம் என கண்டறிந்து, காலம் கடத்துவதை அறவே தவிர்ப்பதே மிகச் சிறப்பாகும்.




## Bore-ஐ விரட்டுவோம்

## படிக்க வேண்டும்

நமது புராணங்கள், புராதன இந்திய ஞானம், சனாதன தர்மம் பற்றி நிறைய தகவல் தரும் எண்ணற்ற நூல்கள் மற்றும் கட்டுரைகள் உள்ளன. அவைப் பற்றி நாம் அறிந்து பெருமை பட வேண்டும். கடவுளைப் பற்றியும் கடவுளின் பக்தர்கள் பற்றியும் தெய்வீக கதைகள் படித்து அவர்களைப் பற்றி சிந்திப்பதே அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாக்கும். நமது தர்மம் மற்றும் புராதன ஞானம் பற்றிய கட்டுரைகள் மற்றும் நூல்கள், நமது வம்சம் பற்றி நம்மை பெருமை கொள்ள உதவி செய்து, எல்லாவற்றையும் நோக்கமுள்ளதாகவும் விவேகமுள்ளதாகவும் காணச் செய்கிறது.

## நமது தற்போதைய நடவடிக்கைகளை ஆக்கப்பூர்வமாக நோக்க வேண்டும்

நமது தற்போதைய வாழ்க்கையில் ஏதாவது அம்சம் நமக்கு அலுப்பூட்டினால், மறுமதிப்பீடு செய்யும் தருணமாக இருக்கலாம். நம் அலுவலக பணியுடன் நாம் சந்தோஷமாக இல்லை என்று வைத்துக் கொள்ளலாம். இரண்டு பட்டியல்கள் செய்வோம். ஒரு பட்டியலில் நமக்கு பணியை பற்றி பிடிக்காத அனைத்து விஷயங்களும் அடங்கியிருக்கும். மக்களைப் பற்றி நாம் என்ன நினைக்கிறோம், ஊதிய படி, பொறுப்புகள், வேலை நேரம், பாராட்டு. அது நம்மை தொல்லை படுத்தினால் அதை பட்டியலிடுவோம். மற்றொரு பட்டியலில், பணியைப் பற்றி நமக்கு பிடித்த அனைத்து விஷயங்களையும் எழுதுவோம். எவ்வளவு சிறிதாக, முக்கியமற்றதாக அது தோன்றினாலும், ஆக்கப்பூர்வமான விஷயமாக அது இருந்தால் அதை எழுதவோம். நமது பணியைப் பற்றி 30 பிடித்த விஷயங்களை கண்டு பிடிக்கும் வரை நிறுத்தக் கூடாது. அது சாத்தியமற்ற ஒன்றாக தோன்றலாம், ஆனால் நாம் நேரம் எடுத்துக் கொண்டு, படைப்பாற்றலுடன் இருக்கலாம். பட்டியலில் சேர்க்க விஷயங்கள் இல்லாமல் போனால், ஒரு இடைவெளிக்குப் பின் மீண்டும் பட்டியலிடம் வரலாம். இரண்டாவது பட்டியலை முடித்தவுடன் முதல் பட்டியலிற்கு திரும்பி சென்று, நாம் பட்டியலிட்ட ஒவ்வொரு எதிர்மறை விஷயத்தைப் பற்றியும் நம்மை நாமே, "இந்த எதிர்மறை உணர்விற்கு நான் எப்படி காரணமாயிருந்திருக்கிறேன்?“ என்று கேட்கவேண்டும். நமக்கு நாமே உண்மையாக இருந்தால், நமது பதில்கள் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தலாம்.

## நடை பயில வேண்டும்

**பல சமயங்களில், நமது பணி அலுப்பூட்டும் சமயத்தில், இதுவே நமக்கு தேவை, அதுவும் நாள் முழுவதும் நாம் உட்கார்ந்து ஒரே ஒரு வேலையை மட்டுமே செய்து கொண்டிருந்தால். அந்த இரத்தத்தை சுழலச் செய்ய வேண்டும்! வெளியே சென்று, சுற்றி நடந்து, மக்களைப் பார்த்து, இயற்கையைக் கண்டு, நமது வாழ்க்கையைப் பற்றியும் அதில் உள்ள மக்களைப் பற்றியும் யோசிக்க வேண்டும்.**

## எழுதவேண்டும்

**மனதில் எழும் எதுவாக இருந்தாலும் அதை எழுதவேண்டும். அது ஒரு எண்ணமோ, ஒரு வரியோ, உணர்ச்சிகளின் திடீர் எழுச்சியோ, ஒரு சம்பவத்தைப் பற்றிய கருத்தாகவோ இருக்கலாம். அந்த நேரத்தில் மனம் எதில் லயிக்கிறதோ அதை எழுதி விட வேண்டும்.**

## ஒரு கவிஞன் அல்லது கலைஞனின் கண்ணோட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்

**நம்மை சுற்றி இருக்கும் ஒவ்வொரு மிகச் சிறிய விஷயத்தையும் ரசிக்கவேண்டும். மக்கள், படைப்புகள், சாதனங்கள், கருவிகள், ஒவ்வொரு தனிப்பட்ட விஷயம்! அனைத்தும் கடவுளின் வேலை. ஒன்று கடவுளின் வியத்தகு தனிப்பட்ட படைப்பு, அல்லது கடவுளாலேயே ஒரு நோக்கத்துடன் செயல்பட வைக்கப்பட்ட மனித மூளையின் வேலை. ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் உள்ள வியப்பையும் காண்பது, நம்மை இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்தும்.**

## மஹாமந்திரம் - அலுப்பு தகர்க்கும் ஆயுதம்

எந்த நடவடிக்கை நமக்கு “Bore" அடிக்கிறதோ (அலுப்பூட்டுகிறதோ) அதன்பின் "மஹாமந்திரம்" என்ற வார்த்தையை போடவேண்டும். வங்கியிலோ அல்லது வாடிக்கையாளர் சேவை மையத்திலோ மெதுவான வரிசையில் நின்று கொண்டிருந்தால், நாம் "வரிசையில் காத்திருக்கும் மஹாமந்திரம்" செய்கிறோம். நாம் வீட்டை சுத்தம் செய்து கொண்டிருந்தால், நாம் "சுத்தமாக்கும் மஹாமந்திரம்" செய்கிறோம். நகராத போக்குவரத்து நெரிசலில் நாம் காத்திருந்தால், "போக்குவரத்து நெரிசல் மஹாமந்திரம்". எந்த ஒரு அலுப்பூட்டும் வேலை செய்து கொண்டிருக்கும் போதும் மஹாமந்திரத்தை பாடிக் கொண்டிருந்தால், அதை அர்த்தமுள்ளதாக ஆக்கி, வேலையை எளிதாக்கவும் மனதிற்கு உதவும்.


love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners


Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

முன்னொரு சமயம்......

பதினாறாம் நூற்றாண்டில், கலி யுகத்தில், திவ்யசிம்ஹன் என்ற ராஜா வாழ்ந்து வந்தார். அச்சமயம், தேவி பலியினால் வணங்கப்பட்டாள். அந்த ராஜாவும் ஒரு சுத்த ஆத்மாவாக இருந்ததால் அப்படிப்பட்ட ஒரு வழிபாட்டிற்கு அவருடைய அரண்மனையில் ஏற்பாடு செய்திருந்தார்.






அந்த வழிபாடு நடக்கும் சமயத்தில்....."இப்பொழுது நாம் பூஜையின் முடிவிற்கு வந்து விட்டோம். அதனால் தேவிக்கு சமர்பிக்க வேண்டிய ஆடுகளை எடுத்து வாருங்கள்."

ராஜா உடனே ராஜ புரோஹிதரை அழைத்து அவரை பலியை பற்றி அறிவிக்குமாறு கட்டளை இட்டார்.







ராஜா ஒரு சிறுவன் மட்டும் வணங்காமல் இருப்பதை கவனித்தான்.


ஏன் நீ ஜகன்மாதாவை ஆணைப்படி வணங்கவில்லை?

ஓவியர்: பாலமுரளி


நீங்கள் ஜகன்மாதா என்று அழைக்கின்றீர்கள், அப்பொழுது எப்படி அந்த அம்மாவிற்கு தன்னுடைய குழந்தைகளான இந்த ஆடுகளை கொலை செய்வதினால் மகிழ்ச்சி ஏற்படும்?
ஸ்வாமிஜி! எனக்கு பகவானின் வழிபாட்டை பற்றி இந்த மனிதர்களுக்கு இருக்கும் அறியாமையை பார்த்தால் மிகவும் வேதனையாக இருக்கிறது.
10 வருடங்கள் கழித்து.....
கமலாக்ஷன் அத்வைதத்தில் நிபுணராக இருந்ததால் அத்வைதாசார்யர் என்ற பண்டிதராக போற்றப்பட்டார். அவர் ஒரு சமயம் மாதவேந்த்ரபுரி என்ற வைஷ்ணவ மஹாத்மாவை சந்தித்தார்.
தாங்கள் தான் ஒருவர் உண்மையான சாத்வீக பக்தியை காண்பிக்க வருமாறு அனுக்ரஹம் செய்ய வேண்டும்.
உன்னுடைய உலக நலனை பற்றிய அக்கறையை பார்த்து எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. பகவானிடம் பிரார்த்தித்து கொண்டே இரு!
பகவானே இந்த உலகத்தில் தன்னை எப்படி வழிபட வேண்டும் என்பதை காண்பிக்க விரைவில் அவதாரம் செய்வான்!
உண்மையான பக்தி என்ன என்பதை எடுத்துக்காட்டுவதற்கும் ராதராணியின் ஏகாக்ர பக்தியை தானும் அனுபவிப்பதற்காக தான் பகவான் சைதன்ய மஹாப்ரபுவாக அவதாரம் செய்தார்.

# புராநவா

**இங்கு காணப்படும் படங்களுக்குள் ஒரு சம்பந்தம் உண்டு. அதை கண்டுபிடிக்கவும்.**


**(விடை அடுத்த இதழில்)**

## சென்ற மாத புராநவா பதில்கள்

**வேதத்தில் கூறப்பட்டிருக்கும் மூன்று இசைக் கருவிகள்**
**(வீணை, வேணு, ம்ருதங்கம்)**

### CROSSWORD

**Across:** 1.Jaipur 2.Ramanujam 3.Sitar 4.Lanka 5.Chess 6.Kabir 7.Thanjavur 8.Manu 9.Iqbal 10.Adi Sankara 11.Karnataka 12.Tulu 13.West Bengal

**Down:** 1.Assam 2.Ravana 3.Pattachithra 4.Meera 5.Patanjali 6.Vishnu 7.Twelve 8. Kerala 9.Malgudi Days 10.Airavata 11.Konark 12.Nine 13.Golu

## சனாதன புதிர் 89 — கேள்வி(ஆத்ரேயன்)

1. வேதம் காலத்தை எப்படி அளக்கிறது?
2. ஸ்ரீநாராயண அஷ்டாக்ஷரி மந்திரம் என்று எதை சொல்லுகிறார்கள்?
3. ஸ்ரீதன்வந்தரி மந்திரம் என்று எதை சொல்லுகிறார்கள்?
4. ஸ்ரீந்ருஸிம்ஹ த்வாத்ரிம்சத் அக்ஷர மந்திரம் என்று எதை சொல்லுகிறார்கள்?
5. ஸ்ரீஹனுமான் மந்திரம் என்று எதை சொல்லுகிறார்கள்?
6. ஸ்ரீ சூர்யநாராயண மந்திரம் என்று எது சொல்லப்படுகிறது?
7. வேதசாகைகளின் எண்ணிக்கை எத்தனை என்று விஷ்ணு புராணம் சொல்கிறது?
8. எந்த எட்டு விதமான விக்ருதியாக அத்யயன முறைகளை மகரிஷிகள் சொல்லுகிறார்கள்?
9. பக்தி மார்க்கத்திற்கு ஆதிசங்கரர் செய்த பெர்ய அனுக்ரஹம் எது?
10. ஆதிசங்கரர் தெய்வ வழிபாட்டு முறையை எந்த நூலில் விளக்கினார்?

## சனாதன புதிர் 89 — பதில்கள் (ஆத்ரேயன்)

1. பதினைந்து தடவை கண்களை மூடி திறந்தால் அது ஒரு காஷ்டை. முப்பது காஷ்டைகள் ஒரு கலை. முப்பது கலைகள் ஒரு முகூர்த்தம். முப்பது முகூர்த்தம் ஒரு அஹோராத்ரம். (பகல்+இரவு - ஒரு நாள்). ஏழு நாட்கள் ஒரு வாரம். பதினைந்து நாட்கள் ஒரு பக்ஷம். முப்பது நாட்கள் ஒரு மாதங்கள். ஆறு மாதம் ஒரு அயனம். இரண்டு அயனங்கள் ஒரு ஸம்வத்ஸரம் (வருடம்).
2. "ஓம் நமோ நாராயணாய" என்ற மந்திரம்.
3. "ஓம் நமோ பகவதே தன்வந்தரயே அம்ருத கலச ஹஸ்தாய சர்வாமய வினாசாய த்ரைலோக்யநாதாய விஷ்ணவே ஸ்வாஹா" என்று மந்திரம்.
4. ஓம் உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் சர்வதோமுகம் ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம் ம்ருத்யும்ருத்யும் நமாம்யஹம் - இது மந்திரம்.
5. ஓம் நமோ பகவதே ஹனுமதே மம மதனக்ஷோபம் ஸம்ஹர ஸம்ஹர ஆத்ம தத்வம் ப்ரகாசய ப்ரகாசய ஹூம் பட் ஸ்வாஹா - இது மந்திரம்.
6. "ஓம் க்ருணி: சூர்ய ஆதித்யோம்" என்பது மந்திரம்.
7. 1180 (ரிக்வேதம் 21; சாமவேதம் 1000; யஜுர் வேதம் 109; அதர்வ வேதம் 50).
8. ஜடா, மாலா, சிகா, ரேகா, த்வஜம், தண்டம், ரதம், கனம், என்ற முறைகள்.
9. ஷண்மத ஸ்தாபனம். கணபதி, சுப்ரமண்யர், சிவன், மஹாவிஷ்ணு, சூர்யன், அம்பாள் என்று தெய்வ வழிபாட்டை ஏற்படுத்தியவர்.
10. ப்ரபஞ்ச சார தந்த்ரம் என்ற நூல்.

# படித்ததில் பிடித்தது

செய்தித்தாள்களிலும் பத்திரிக்கைகளிலும் வந்த சுவாரஸ்யமான செய்திகளின் தொகுப்பு

தொகுப்பு: ஸ்ரீ பாலக்ருஷ்ணன்

## California schools to have richer content on ancient India

The New Indian Express
July 16, 2016

**கலிஃபோர்னியாவில் கல்வி வாரியம் முதன் முறையாக புராதன இந்தியா மற்றும் ஹிந்து மதம் பற்றி கூடுதல் வளமான பொருளடக்கம் கொண்ட புதிய பள்ளி பாடத்திட்ட கட்டமைப்பை அங்கீகரித்துள்ளது. இப்பொழுது, கட்டமைப்பில் வேதத்தில் ரிஷிகள், ஹிந்து மத போதனைகள் மற்றும் தத்துவம், பக்தி மஹான்கள், இசை, நாட்டியம், கலை மற்றும் இந்தியாவின் அறிவியல் பங்களிப்புகள் ஆகிய அனைத்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

## PM Modi gifted Chinese translations of ancient Indian texts

India Today
September 4, 2016

**பிரதமர் நரேந்திர மோடிக்கு இன்று பகவத் கீதை, சுவாமி விவேகானந்தரின் கட்டுரைகள், பதஞ்சலியின் யோக சூத்திரங்கள், நாரதரின் பக்தி சூத்திரங்கள், யோக வசிஷ்டா போன்ற புராதன இந்திய உரைகளின் சீன மொழிபெயர்ப்புகள் வழங்கப்பட்டது.**

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| **1-10** அக்டோபர் | பக்த விஜயம் - ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாசம்<br>அருள்மிகு அன்னை புவனேசுவரி திருக்கோயில், கேகே நகர்,சென்னை |
| **12** அக்டோபர் | ஏகாதசி |
| **26** அக்டோபர் | ஏகாதசி |

## அறிவிப்பு

**அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

Email: helpdesk@madhuramurali.org
Ph: "24895875"
SMS '9790707830'

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி


Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email :
contact@namadwaar.org



- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.


மதுரமுரளி



ராதாஷ்டமி, மதுரபுரி ஆஸ்ரமம், 9 Sep 2016



Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar